





வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் நடைபெறவுள்ள அரசு விழாக்களில் கலந்து கொள்வதற்காக நேற்று (25.6.2025) சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து வேலூர் புறப்பட்டுச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாகமாக வழியனுப்பி வைத்தார்கள்.



முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட கழக மாற்றுத்திறனாளிகள் அணிக்கு, தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ரெ.தங்கம் மற்றும் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் டி.எம்.என்.தீபக் ஆகியோர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் 24.6.2026 சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

## ஆதிக்க இருள் அகற்றிட வந்த விடிவெள்ளி

# ‘சமூக நீதிக் காவலர்’ வி.பி.சிங் புகழை நாளும் போற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன். 26-

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிடுகையில் “ஆதிக்க இருள் அகற்றிட, சமூக நீதியெனும் பேரொளியைத் தூக்கிச் சுமந்த சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் புகழை நாளும் போற்றுவோம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேனாள் இந்தியப் பிரதமர் சமூக நீதிக் காவலர் வி.பி சிங் அவர்களின் 95ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக



வலைதளப் பதிவு வருமாறு:-

**இந்திய நிலப்பரப்பில் மண்டிக்கிடந்த ஆதிக்க இருள் அகற்றிட, சமூகநீதி எனும் பேரொளியைத் தூக்கிச் சுமந்த விடிவெள்ளி ‘சமூகநீதிக் காவலர்’ வி.பி. சிங் அவர்களின் புகழை நாளும் போற்றுவோம்! ஆதிக்கத்துக்கு எதிரான போராட்ட வரலாற்றைத் திரிபுகளால் மாற்றுவது மீண்டும் அடிமைத்தனத்துக்கே வழியமைக்கும் முயற்சி என்பதை இளம் தலைமுறைக்கு எடுத்துச் சொல்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# விளவங்கோடு கலைஞர் நூலகத்தில் வாசித்தல் போட்டி!



சென்னை, ஜூன் 26-

முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்தநாளை முன்னிட்டு, கன்னியாகுமரி மேற்கு மாவட்டம் விளவங்கோடு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மனோ தங்கராஜ் ஆலோசனைப்படி விளவங்கோடு தொகுதி மாணவ- மாணவியர்களுக்கான வாசித்தல் போட்டி 22.06.2025 அன்று நடைபெற்றது.

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் லிஜீஷ் ஜீவன் கலந்துகொண்டு, நூலகத்தின் அவசியம் குறித்தும், வாசிப்பின் பயன்களை குறித்தும் மாணவர்களிடையே பேசினார். வருகை தந்து வாசித்தல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு நிகழ்ச்சியின் நிறைவில், பதக்கங்களும், கோப்பைகளும், பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் திரளான மாணவ,மாணவியர் கலந்து கொண்டனர்.

## தி.மு.கழகத்தில் 2 கோடி உறுப்பினர்களைச் சேர்க்க

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை இயக்கம்!

## ஜூலை 1 அன்று முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

### அமைச்சர் தங்கம் தென்னரசு - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!





சென்னை, ஜூலை 26-

தி.மு.கழகத்தில் 2 கோடி உறுப்பினர்களை சேர்க்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தை ஜூலை 1 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைக்கிறார்! தமிழ் மொழி சமஉரிமை பெற்றிட தமிழ்நாடு ஓரணியில் திரள வேண்டும்! பெரியாரையும், அண்ணாவையும் பழித்தவர்கள் யாரும் தமிழ்நாட்டு அரசியலில் தலையெடுத்தது இல்லை! என செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் தங்கம் தென்னரசு - கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி தெரிவித்தனர்.

24.06.2025 அன்று பிற்பகல் அமைச்சர் தங்கம் தென்னரசு, அமைச்சர் அமைச்சர் மூர்த்தி, ஆர்.எஸ்.பாரதி, ஆகியோர் சென்னை, தேனாம்பேட்டை, அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

இதுபற்றிய செய்தி அறிக்கை வருமாறு :-

‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற பெயரில் திமுகவின் உறுப்பினர் சேர்க்கைக்கான பணியை நாங்கள் தொடங்கியிருக்கிறோம்.

வரக்கூடிய ஜூலை மாதம் 1 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் இது குறித்து பத்திரிக்கையாளர்களைச் சந்தித்து, முறைப்படி உறுப்பினர் சேர்க்கையை தொடங்க இருக்கிறார்.

அடுத்த நாள் அனைத்து மாவட்டங்களில் உள்ள இடங்களிலும் ஆங்காங்கே இருக்கக் கூடிய மாவட்ட கழக செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் பேரணியாகச் சென்று இந்த உறுப்பினர் சேர்க்கை முகாம்களை தொடக்கி வைக்க இருக்கிறோம்.

அதை தொடர்ந்து ஜூலை மாதம் 3 ஆம் தேதி தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 68,000 வாக்குசாவடிகளிலும் உறுப்பினர் சேர்க்கை முகாம்களை வாக்குச்சாவடி முகவர்கள், தகவல் தொழில்நுட்ப துறை முகவர்கள், மற்ற அணிகளாக இளைஞர் அணி, மகளிரணி போன்றவற்றின் நிர்வாகிகள், கிளை கழகத்துடைய நிர்வாகிகள் ஒவ்வொரு பூத்-களிலும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு நேரடியாக சென்று ஒவ்வொரு வீட்டிலும் தலா 10 நிமிடம் அமர்ந்து, அங்கே இருக்கும் வாக்காளர் பெருமக்களில் 30% நம்முடைய கழகத்தில் இணையகூடிய வகையில் அரசியல் பணியாற்றச் சொல்லியிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று, அத்தனை வாக்காளர்களையும் சந்தித்து மண், மொழி, மானம் காக்க ஓரணியில் இணைய அழைப்புவிடுக்கப்போகிறோம்.

இதன் இன்னொருகட்டமாக, ஏறத்தாழ 2 கோடி பேரை நமது கழகத்தின் உறுப்பினர்களாக சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நமது கழகத்தின் முக்கிய திட்டங்களை விளக்கி, இந்த நான்கு ஆண்டு ஆட்சி சாதனைகளை அவர்கள் இடத்தில் எடுத்து சொல்லி, டிஜிட்டலாக அவர்கள் ஒரு செயலியின் மூலமாகவும், ஒரு படிவம் மூலமாகவும் அவர்களை இணைக்கக் கூடிய முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

தமிழகத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் செல்லும் அளவில் இந்த உறுப்பினர் சேர்க்கைக்கான முகாம்கள் நடைபெற இருக்கிறது. தமிழக மக்கள் எப்போதும் எந்த ஒரு அரசியல் சூழ்நிலையிலும் மதங்களையோ,சாதிகளையோ அவற்றுக்கெல்லாம் மாறுபட்டு எப்போதும் ஓரணியில் நின்று அரசியல் கருத்துகளை எடுத்துரைப்பார்கள்.

தமிழ்நாடு எந்த ஒரு சவாலையும் எதிர்க்கொள்கிற போது, அது ஓரணியில் திரண்டு நிற்பதுதான் தமிழ்நாட்டிற்குரிய இயற்கையான பண்புக் கூறு என்பதை மனதில் வைத்து, இந்த ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்கிற உறுப்பினர் சேர்க்கையை முதலமைச்சர் அவர்கள் 1 ஆம் தேதி தொடங்கி வைக்க இருக்கிறார்.

தொடர்ச்சியாக வட மொழிக்கு அவர்கள் அதிக முக்கியத்துவத்தையும் நிதியையும் ஒதுக்கியுள்ளனர். இதனால் வட மொழிக்கு அவர்கள் கொடுக்கும் முன்னுரிமை மீண்டும் உறுதியாகியுள்ளது.

தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற காரணத்தினால் தான் கலைஞர் அவர்கள் செம்மொழி அந்தஸ்த்தை உருவாக்கினார்கள். வட மொழிக்கு இருக்க கூடிய முக்கியத்துவத்தை, மற்ற மொழிகள் உட்பட தமிழ் மொழியும் பெற முடியாமல் போயுள்ளதால் தான், தமிழ்நாடு ஓரணியில் திரள வேண்டும் என்று கூறுகின்றோம்.

திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பின்வரும் செய்தியைத் தெரிவித்தார்:-

‘உடன்பிறப்பே வா’ என்ற நிகழ்வின் மூலம் ஒன்றிய, நகர, பேரூர் கழகத்துடைய செயலாளர்களை ஒவ்வொருவரையும் தனித் தனியாகச் சந்திப்பேன் என்று 1 ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற பொதுக் குழுவில் முதலமைச்சர் அறிவித்தற்கு ஏற்ப கடந்த 23 ஆம் தேதியில் இருந்து இதுவரை 20 தொகுதியின் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், மண்டல பொருப்பாளர்கள் ஆகியரோடு தலைவர் தளபதி அவர்கள் நாள்தோறும் 3 மணி நேரம் உரையாடி வருகின்றார்.

ஒவ்வொரு கூட்டமும் 3 மணி நேரத்திற்கு மேலாக அவர்களின் கருத்துகளைக் கேட்டு, தலைவரும் நிர்வாகிகளும் மனம் விட்டு பேசினார்கள். அதன் அடிப்படையில் கழகத்தின் தோழர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் சென்றார்கள். ஒன்றிரண்டு நாட்களில் உறுப்பினர்கள் சேர்க்கையை தொடங்க இருக்கிறார்கள். ஆகவே உணர்ச்சி யோடு, மகிழ்ச்சியோடு இந்த சந்திப்பு மிகவும் பயன் உள்ளதாக அமைந்துள்ளது.

பெரியார், அண்ணாவுக்கு அவமதிப்பு பற்றி -

நாங்கள் தெளிவாக எங்களின் அறிக்கையில் சொல்லி விட்டோம், எங்களை விட பொதுமக்கள் கொதித்து போய் இருக்கிறார்கள், தமிழ்நாடே கொதித்து போய் இருக்கிறார்கள். பெரியாரையும், அண்ணாவையும் பழித்தவர்கள் யாரும் தமிழ்நாட்டு அரசியலில் தலையெடுத்தது இல்லை. இந்த இரு பெரும் தலைவர்களையும் இழித்து பேசியதை வேடிக்கை பார்த்ததைத் திராவிட முன்னேற்ற கழகம் மட்டுமில்ல, தமிழ் உணர்வுமிக்க அனைவரும் கண்டனத்தை தெரிவித்து கொண்டு இருக்கிறார்கள். அதனை நீங்களே பார்க்கலாம். ஒரு சொல்லும் சரி, ஓர் ஆயிரம் சொல்லும் சரி உணர்ச்சி உள்ளவர்களுக்கு உறைக்கும்.

அரசு நடவடிக்கை எடுக்குமா என்கிற கேள்வி பற்றி -

மக்களே எதிர்க்கும்போது அரசு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கு? இதை பெரிதாக வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் இதை புறக்கணித்துவிட்டார்கள். நாங்கள் 100 மாநாடு நடத்தி திமுகவுக்கு சேர்க்க வேண்டிய ஓட்டை ஒரே மாநாட்டில் சேர்த்து விட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# அனைத்து பகுதிகளிலும் சீரான குடிநீர் விநியோகம் செய்திட வேண்டும்!

## குடிநீர் விநியோகம் தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

*சேலம், ஜூன் 26 -*

*சேலம் மாவட்டத்தில் சீரான குடிநீர் விநியோகம் தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் 23.06.2025 அன்று அஸ்தம்பட்டி பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப்பின், சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:*

*முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் தொடர்ந்து கண்காணித்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அந்தவகையில் சேலம் மாவட்டம் முழுவதும் குடிநீர் தொடர்பான பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அலுவலர்கள் பணியாற்ற அறிவுறுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப் பட்டு வருகிறது.*

*அந்தவகையில், இன்றைய தினம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் என அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுவரும் குடிநீரின் அளவு மற்றும் குடிநீரின் தேவைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சேலம் மாவட்டம் முழுவதும் சீரான குடிநீர் விநியோகம் வழங்கிடுவதை அலுவலர்கள் உறுதி செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*குறிப்பாக, கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும், நடைபெற்று வரும் குடிநீர் மேம்பாட்டு பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் எவ்வித மின்தடையும் இல்லாமல் தொடர்ச்சியாக மின்சா ரம் வழங்கப்படுவதை உறுதி செய்திடவும், குடிநீர் குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டால் உடனுக்குடன் சரிசெய்திட வேண்டுமென வும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*அதேபோன்று, குடிநீர் குழாய்கள் செல்லும் பகுதிகளில் சாலை அமைக்கும் பணிகள் நடைபெறும் போது பாதுகாப்பாக குடிநீர் குழாய்களுக்கு பழுது ஏற்படாத வகையில் பணிகளை மேற்கொள்ளவும், குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் ஏதேனும் இருப்பின் அவற்றை போர்க்கால அடிப்படையில் விரைந்து சீரமைத்திடவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.*

*இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி சங்கமித்திரை, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், மாநகரப் பொறியாளர் செல்வநாயகம், செயற்பொறியாளர்கள் ஆர்.செந்தில்குமார், திருமதி. திலகா, கே.செந்தில்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



நேற்று (25.6.2025) மேனாள் இந்தியப் பிரதமர், சமூகநீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களின் 95வது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.